| | | |
|---|---|---|
| சாட்சி : PW 1<br>திருமதி. மல்லிகா<br>க.பெ. திரு. செல்வம் | அ.வ.எண்.94/2016 | 01.04.2026 |

2 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

1) இவ்வழக்கை என்ன காரணத்திற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் என்னுடைய நிலம் எனக்குரியது என்று கோரி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன். வழக்கு சொத்து எனக்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்றால் எனது தகப்பனார் எனக்கு எழுதிக்கொடுத்தது. மேற்படி வழக்கு சொத்து எனது தகப்பனாருக்கு எப்படி கிடைத்தது என்றால் எனது தகப்பனார் சொந்தமாக கிரையம் பெற்ற சொத்து.

2) எனது தகப்பனார் என் பெயருக்கு வழக்கு சொத்தை பொறுத்து தான செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். என்பெயரில் எழுதிய தான செட்டில்மெண்ட் ஆவணத்தை ரத்து செய்துவிட்டு, வழக்கு சொத்தை பொறுத்து பாஸ்கர் பெயருக்கு ஒரு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல, என் பெயரில் உள்ள செட்டில்மெண்ட் ஆவணம் ரத்து செய்யப்படவில்லை.

3) நான் இவ்வழக்கில் எனது தகப்பனார் என் பெயருக்கு வழக்கு சொத்தை பொறுத்து ஏற்படுத்திக்கொடுத்த தான செட்டில்மெண்ட் ஆவணத்தை ரத்து செய்து விட்டதாகவும், அவ்வாறு ரத்து செய்தது தவறு என்று பரிகாரம் கேட்டுள்ளேனா என்றால் இல்லை. நானும், எனது சகோதரி நிர்மலாவும் சேர்ந்து இலால்குடி சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண்.76/2022 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான்.

4) மேற்படி வழக்கிலும், இந்த வழக்கில் உள்ள அதே பரிகாரம் கேட்டு தாக்கல் செய்துள்ளோமா என்றால் மேற்படி வழக்கு எனது தகப்பனார் கிரையம் பெற்ற வீடு மற்றும் நிலத்தை பொறுத்தது, இவ்வழக்கு எனக்கு தான செட்டில்மெண்ட் மூலம் பாத்தியப்பட்ட நிலத்தை பொறுத்தது. இவ்வழக்கில் உள்ள நிலத்தை பற்றி வேறு எவ்வித வழக்கும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

5) நான் இவ்வழக்கில் உண்மை விபரங்களை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது தந்தை உயிருடன் இருந்த காலத்தில் எனக்கு வேறு ஒரு வீட்டுமனையை வாங்கி கொடுத்தார் என்றால் சரியல்ல, அது நானாக கிரையம் பெற்றது, அதற்கும் எனது தகப்பனாருக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை. மேற்படி வீட்டுமனை எனது தகப்பனார் எனக்காக வாங்கி கொடுத்தது என்றாலும், ஆனால் அது நான் கிரையம் பெற்றது என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

6) மேற்படி வீட்டிமனையில் வீடு கட்ட வங்கியில் கடன் கேட்ட போது செக்யூரிட்டிக்காக மட்டுமே எனது தந்தை வழக்கு சொத்தை பொறுத்து என் பெயருக்கு தான செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்திக் கொடுத்தார் என்றால் சரியல்ல. நான் மேற்படி வீட்டுமனையில் வீடு கட்டி முடித்து கடனை அடைத்த பிறகு, என் தந்தை என் பெயருக்கு ஏற்படுத்திக் கொடுத்த தான செட்டில்மெண்ட் ஆவணத்தை ரத்து செய்துவிட்டு, எனது சகோதரரான 2ம் பிரதிவாதிக்கு அதனை பொறுத்து தான செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக்கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல.

7) எனது தகப்பனார் தனக்குரிய சட்டப்படியான உரிமையை பயன்படுத்தியே என் பெயரில் ஏற்படுத்திக்கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணத்தை ரத்து செய்துள்ளார் என்றாலும், எனது சகோதரர் பெயருக்கு தான செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்திக் கொடுத்துள்ளார் என்றாலும் சரியல்ல. நான் இவ்வழக்கில் கோரியுள்ள அதே பரிகாரத்தை மாண்புமிகு சார்பு நீதிமன்ற வழக்கிலும் கோரியுள்ளதால், என்னுடைய வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

8) அதற்கு பின்னிட்டு வழக்கு சொத்தை பொறுத்து எனது சகோதரர் அவரது மனைவிக்கு தான செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்திக்கொடுத்துள்ளார் என்ற விபரத்தை தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன், அதற்காக தான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன். எனது சகோதரரின் மனைவியை இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சேர்க்கவில்லை.

9) நான் மற்றவர்களின் தூண்டுதலின் பெயரில் எனது சகோதரான 2ம் பிரதிவாதிக்கு மனஉளைச்சலை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக நான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சட்டப்படி இவ்வழக்கை தாக்கல் செய்ய எனக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. என்னுடைய வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல.